LIBRARY
20 JUL 1965
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 17th March 1965.

The House met in the Assembly Chamber, Fort St, George, at half past eight of the clock, Mr. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

கோவில்பட்டியில் போலீஸ் தடியடிப் பிரயோகம்

* 253 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவில்பட்டியில் சமீபத்தில் அரிசி விநியோகத்தில் அதிருப்தி தெரிவிக்க நடத்தப்பட்ட ஊர்வலத்தில் போலீஸாரால் தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில் அதன் விவரமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) கோவில்பட்டியில் 1964 டிசம்பர் மாதம் 22-ம் தேதியில் ஹர்த்தாலை மீறி ஸ்ரீ கருப்பய்யாத் தேவர், ஸ்ரீ காந்திமதிச் செட்டியார் ஆகியோரின் கடைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சுமார் 300 பேர் கொண்ட கட்டுக் கடங்காத கூட்டம் ஒன்று மேற்படி கடைகளைத் தாக்கிக் கொள்ளையடித்தது. அப்பொழுது போலீசார் தலையிட்டு கூட்டத்தைக் கலைத்தனர். கூட்டத்தினர் போலீசார்மீது கல்லெறியத் தொடங்கியபொழுது, போலீசார் இலேசாகத் தடியடி நடத்த வேண்டியிருந்தது. இதனால் மூன்று பேருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டன. இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் மீதும், ஒரு ஹெட் கான்ஸ்டபிள்மீதும், காந்திமதிச் செட்டியார் மீதும் மற்றும் ஒருவர் மீதும் கற்கள் எறியப்பட்டன. போலீசார் எழுபேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

(*a*) Yes.

(*b*) When an unruly mob of about 300 persons attacked and looted the shops of Sri Karuppiah Thevar and Kanthimathi Chettiar at Koilpatti, kept open on 22—12—1964 in defiance of the Hartal observed there, the police intervened to disperse it. The police had to resort to a mild lathi charge when the mob pelted stones at them. Three persons received simple injuries. Two Sub-Inspectors and one Head-Constable and Kanthimathi Chettiar and another received stone-hits. The police have registered cases against seven persons who were arrested and released on bail later.

திரு. து. ப. அழகமுத்து : வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்கள் எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மூன்று பேர்கள் லத்தி சார்ஜினால் மைனர் இன்ஜுரீஸ் அடைந்தவர்கள். பாண்டியன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொல்கிறார்கள். மொஹிதீன் கம்யூனிஸ்ட் ரைட் விங்கைச் சேர்ந்தவர், கனகராஜ், செல்லய்யாவின் மகன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்.

[17th March 1965

Medical opinion is that Pandian might have received a stone hit.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் முடிவு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முடிவு என்ன என்று தெரியவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : பொதுமக்கள் கிளர்ச்சி செய்து தகராறு செய்தார்கள் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், வழக்குபோடுவது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீது மட்டும் ஏன் போடவேண்டும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் பொதுமக்கள் என்று சொல்லவில்லை. ஒரு கூட்டம் என்றுதான் சொன்னேன். யார் யார் அதில் ஈடுபட்டார்களோ அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. இதில் திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் அல்லது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. கட்சியைப் பார்த்துப் போடப்படவில்லை.

Official language

* 254 *Q.*—SRI S. J. RAMASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any instructions have been received by this Government from the Centre in regard to the use of Hindi as official language; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

ஆட்சிமொழிச் சட்டத் திருத்தம்

* 255 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

இந்திய அரசியல் மொழிச் சட்டத்தினை திருத்த வேண்டியதன் அவசியம் பற்றி மத்திய அரசுக்கு ஏதேனும் ஆலோசனை கூறப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நமது முதலமைச்சர் அவர்களால் ஆலோசனை கூறப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மொழிச் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நிரந்தர இரு மொழிக் கொள்கையை வற்புறுத்த வேண்டுமென்றும், அந்த நிலைக்கு அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பதற்கு, நிபுணர்களைக் கலந்து ஆலோசித்தார்களா ?